# தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 ன் படி கீழ்க்கண்ட தகவல் கோருதல்

அனுப்புதல்

செல் : 81446 54397

G. வரதராஜன்,
த/பெ. கோவிந்தன்,
கோம்பைக்காடு,
கோரணம்பட்டி (Po),
கொங்கணாபுரம் (Via),
எடப்பாடி (Tk),
சேலம் மாவட்டம், தமிழ்நாடு - 637102.

பெறுதல்

The Public Information officer,
Power Grid Corporation of India Ltd
Pragati Mahalakshmi,
South Block (2nd & 3rd floor)
No. 62, 3rd Cross, MEI Road,
Industrial Suburb, Yeshwantpur,
Bangalore – 560 022.
Karnataka

**பொருள் : தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 ன் கீழ்க்கண்ட தகவல்களை அளிக்க வேண்டுகிறேன்.**

அய்யா,

வணக்கம். சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா, கோரணம்பட்டி கிராமம், எண் : 453/3E ல் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது. அதில் தூத்துக்குடி To தர்மபுரி செல்லும் 765kv மின் பாதை மற்றும் மின் கோபுரம் அமைக்க எங்கள் நிலத்தில் 1 ½ ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சள் நிற பெயிண்டால் குறியீடு செய்தார்கள். ஆனால் கடந்த ஆகஸ்ட் 2013 மாதத்தில் எங்கள் தோட்டத்தில் ஏற்கனவே மார்க் செய்த இடத்தை விட்டு 10 மீட்டர் தூரம் தள்ளி குழி தோண்டி டவர் அமைக்க முயற்சித்தார்கள். குழி தோண்டிய போது Power Grid Corporation அதிகாரிகள் வெடி வைத்ததால் எங்கள் குடிசை மீது கல்விழுந்து சேதமடைந்த போது எனது தகப்பனார் மயிரிழையில் உயிர் தப்பினார். அப்போதிலிருந்து தற்போது வரை எனது தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். இதற்கெல்லாம் காரணம் கோரணம்பட்டி கிராமம் சர்வே எண் : 416/5B2 ல் பெட்ரோல் பங்க வைப்பதற்காக 416/5B2 நிலத்தில் (அதாவது சர்வே எண் 416/5B2 லிருந்து டவரையும் லைனையும் மாற்றுவதற்காக) இருந்து டவர் மற்றும் லைனை மாற்றி அருகில் உள்ள நிலம் சர்வே எண் : 416/4C1 ல் சுமார் 55 மீட்டர் தூரம் தள்ளி போட முயற்சி செய்து கொண்டுள்ளார்கள். எனவே எனக்கு கீழ்க்கண்ட தகவல்களை அளிக்க வேண்டுகிறேன்.

தகவல் :

1. தூத்துக்குடி To தர்மபுரி செல்லும் 765kv மின் பாதை மற்றும் மின் கோபுரம் அமைக்க எந்த ஆண்டு எந்த தேதியில் அரசு ஒப்புதல் வழங்கியது. தகவல் அளிக்க வேண்டுகிறேன்.

2. சேலம் மாவட்டத்தில் டவர் மற்றும் மின் பாதை அமைக்க எந்தத் தேதியில் இறுதி திட்டம் தயாரித்து ஒப்பதல் வழங்கப்பட்டது. அதன் நகல் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

3. இறுதியாக ஒப்பதல் வழங்கிய உயர் அதிகாரியின் பெயர் மற்றும் அவரது அலுவலக முகவரி ஆகியவற்றை அளிக்க வேண்டுகிறேன்

4. Power Grid Corporation Ltd ன் உயர் அதிகாரி கையொப்பமிட்டு இறுதியாக்கம் செய்யப்பட்ட பின்னர், எத்தனை இடங்களில் தாங்களாகவே இடத்தை மாற்றி டவர் அமைத்தல் மற்றும் மின் பாதையை மாற்றி அமைத்துள்ளார்கள். விபரம் அளிக்க வேண்டுகிறேன்.

5. அப்படி மாற்றி அமைக்க எந்த உயர்அதிகாரியிடம் அனுமதி பெற்று லைனையும், டவரையும் மாற்றியுள்ளார்கள் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

6. ஆரம்பத்தில் உயர் அதிகாரிகளால் ஒப்புதல் வழங்கப்பட்ட Route மற்றும் டவர் point மேப்பின் நகல் ஒன்று அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

7. தாங்கள் மாற்றியமைத்தபின் போடப்பட்ட Route மற்றும் டவர் point ன் நகல் ஒன்று அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

8. சேலம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை Angle Point டவர் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. அவைகளின் No. களை கொடுக்க வேண்டுகிறேன். (ஒவ்வொரு Angle point ன் எண்கள்)

மேலே கண்ட அனைத்து தகவல்களையும், உயர் அதிகாரிகளின் கையொப்பமிட்டு வழங்க வேண்டுகிறேன்.

அ) ரூ 10-க்கான Postal order இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

ஆ) தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 ன் கீழ் பிரிவு 19 (1) ஐ தவிர்க்க வேண்டுகிறேன்.

இ) நான் கோரிய தகவல்கள் அனைத்தையும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 -ன் அனைத்து பிரிவிற்கு உட்பட்டு வேண்டுகிறேன். மேற்குறிப்பிட்ட தகவல்களை எனக்கு அளிக்க ஏதேனும் தொகை செலுத்த வேண்டுமெனில் செலுத்த தயராக உள்ளேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் : எடப்பாடி

நாள் : 19-02-2014

இப்படிக்கு,

G. வரதராஜ.

(G. வரதராஜன்)